(சுருக்கம்)

திருத்திய ஊதிய விகிதங்கள், 2009 – அனைத்து துறைகளில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு ஊதிய திருத்தம் அனுமதித்து ஆணையிடப்படுகிறது.

------------------------------------------------------------------------------------------------------------

**நிதி (ஊதியப்பிரிவு)த் துறை**

அ.ஆ. நிலை எண்:65

நாள்: 26—2—2011.
மாசி,14.
திருவள்ளுவர் ஆண்டு, 2042.

<u>படிக்கவும்</u>:--

1. அரசாணை நிலை எண்.234, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 1–6–2009.
2. அரசாணை நிலை எண்.235, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 1–6–2009.
3. அரசு கடித எண்.41530 / ஊதியப் பிரிவு / 2009–1, நிதித்துறை, நாள்: 28–7–2009.
4. அரசு கடித எண்.63305 / ஊதியப் பிரிவு / 2010–1 மற்றும் 2, நிதித்துறை, நாள்: 8–11–2010.
5. அரசாணை நிலை எண்.45, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 10–2–2011.
6. தமிழ்நாடு ஓட்டுநர்கள் சங்கத்தின் மனு நாள்: 18--02—2011.

******

**<u>ஆணை</u>:–**

அலுவலர் குழு, 2009–ன் பரிந்துரைகளின்படி அனைத்து துறைகளில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் / தட்டச்சர்களுக்கு ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000 அனுமதித்து 1–1–2006 முதல் கருத்தியலாகவும் 1–1–2007 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன. அவ்வாறே ஓட்டுநர் பணியிடங்களுக்கும் திருத்திய ஊதிய விகிதங்கள் முறையே ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000/– நிர்ணயித்து ஆணையிடப்பட்டது.

2. மேலே 5–ல் படிக்கப்பட்ட அரசாணையில் அனைத்து துறைகளில் உள்ள இளநிலை உதவியாளர் / தட்டச்சர்களுக்கு ஊதிய விகிதம் ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000–லிருந்து ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2400–ஆக திருத்தம் செய்து 1–1–2006 முதல் கருத்தியலாகவும் 1–2–2011 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. ஓட்டுநர் பணியிடங்களுக்கு இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு அனுமதிக்கப்பட்ட முந்தைய ஊதிய விகிதமான ரூ.3200—4900–க்கு இணையான திருத்திய ஊதிய விகிதம் அலுவலர் குழு, 2009 பரிந்துரையின்படி ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000 நிர்ணயம் செய்யப்பட்டு சமநிலையில் இருந்து வந்துள்ளனர். இதனடிப்படையில் மேலே 6–ல் படிக்கப்பட்ட மனுவில் தமிழ்நாடு ஓட்டுநர்கள் சங்கம் இளநிலை உதவியாளர்களுக்கு

.... / 2 /

ஊதிய விகிதத்தை உயர்த்தி வழங்கியதை தங்களுக்கும் நீட்டித்து வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். இக்கோரிக்கையை அரசு கவனமுடன் பரிசீலித்து இளநிலை உதவியாளர்களும் ஓட்டுநர்களும் முந்தைய ஊதிய விகிதத்தில் ஒரே சமநிலையில் இருந்ததை கருத்தில் கொண்டு மேலே 5–ல் படிக்கப்பட்ட அரசாணையில் இளநிலை உதவியாளர்களுக்கு ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000–லிருந்து ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2400– ஆக ஊதிய திருத்தம் செய்யப்பட்டதை அனைத்து துறைகளில் உள்ள ஓட்டுநர்களுக்கும் நீட்டிக்கலாம் என முடிவெடுத்து ஓட்டுநர்களின் ஊதிய விகிதத்தை ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ.2000–லிருந்து ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ.2400 ஆக திருத்தம் செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேற்கூறிய ஊதிய திருத்தம் 1––1––2006 முதல் கருத்தியலாகவும் 1––3––2011 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

**/ஆளுநரின் ஆணைப்படி /**

**க. சண்முகம்,**
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள், சென்னை–2/9.
செயலாளர், சட்டமன்றப் பேரவை, தலைமைச் செயலகம், சென்னை–2.
ஆளுநரின் செயலாளர், சென்னை–32.
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், கிண்டி, சென்னை–32.
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள், (அ.ந.மு / பட்டியல்கள்) , சென்னை – 2/9.
அனைத்துத் துறைத் தலைவர்கள்/ மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்ட நீதிபதிகள்/
முதன்மை நீதித்துறை மாஜிஸ்திரேட்டுகள்.
மாநில கணக்குத் துறைத் தலைவர் ( கணக்குகள் (ம) உரிமைத் தொகை) , சென்னை–18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை –I), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை –II), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (CAB), சென்னை–9 / மதுரை.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–104.
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை–6.
தமிழ்நாட்டின் அனைத்து பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
இயக்குநர், கருவூலங்கள் மற்றும் கணக்குத்துறை, சென்னை-15.
ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை–6.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை–108.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–6.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், (வடக்கு/ தெற்கு / கிழக்கு ) சென்னை – 1 /35/8.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், மதுரை – 625 001.
அனைத்து கருவூல அலுவலர்கள் / அனைத்து சார்நிலைக் கருவூல அலுவலர்கள்.
மாநகராட்சி ஆணையர், சென்னை / மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி /
சேலம் / திருநெல்வேலி / தூத்துக்குடி / வேலூர் / திருப்பூர் / ஈரோடு.
அனைத்து கோட்ட வளர்ச்சி அலுவலர்கள் / கோட்டாட்சியர்கள் / வட்டாட்சியர்கள்/
வட்டார வளர்ச்சி அலுவலர்கள் / நகராட்சி ஆணையாளர்கள்.

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சங்கங்கள்.

<u>நகல் பெறுவோர்:</u>
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை—2.
மாண்புமிகு துணைமுதலமைச்சரின் செயலாளர், சென்னை—2.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—2.
அரசு தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை—2.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், நிதித்துறை, சென்னை—9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

து. பரிந்தர்
26/2/2011

ஆராய்ச்சி அலுவலர்.